உ

சந்தோஷம்

# ஓங்கார ஆசிரமம்



**மயிலாடுதுறை பரப்பிரம்ம சற்குரு சித்தர் சுவாமிகளின்**

**51வது ஆண்டு குருபூஜையை முன்னிட்டு**

# 60 இலை படையல் அழைப்பிதழ்

**இடம் : பி.முட்லூர் ஆஞ்சநேயர் சந்நிதானம் | காலம் : 18.8.2014, திங்கட்கிழமை**

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மஹேச்வரஹ
குருஸ் ஸாக்ஷாத் பரப் பிரம்மா தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தைக் கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவுருவைச் சிந்தித்தல் தானே.
- திரு மூலர்

அஞ்சிலே ஒன்று பெற்றான்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக்கண்டு அயலாரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவன் எம்மையளித்துக் காப்பான்

மெய்யன்புடையீர்!

பரப்பிரம்ம சற்குரு சித்தர் சுவாமிகள் 60 ஆண்டுகள் 3 மாதம் இவ்வுலகில் வாழ்ந்தார். பரங்கிப்பேட்டை கொத்தர் தெருவில் சுமார் 10 ஆண்டுகள் வாழ்ந்து 'ஹனுமத் சுவாமிகள்' என்ற திருநாமத்தில் தன் தெய்வப்பணிகளை ஆற்றிவந்தார். ஆஞ்சனேயர் கோயிலில் இருந்து வந்தார். சித்தர் சுவாமிகளும் மௌனசுவாமிகளும் நெருங்கிய நண்பர்கள் ஆவார்கள். தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா அவர்கள் 19.1.1937 இல் கொத்தர் தெருவில் தான் அவதாரம் செய்தார்.

இங்குள்ள மக்களுக்கு சித்தர் சுவாமிகள் திருவருட்பணியும், மருத்துவ பணியும், மெய்ஞ்ஞான ஆன்மீகப்பயிற்சியும் அளித்து வந்தார்கள். ஓராண்டிற்கு ஒரு இலை கணக்கில் 60 ஆண்டிற்கு 60 இலைகள் இட்டு அமுது படைத்தல், இந்த 60 இலை படையலில் பங்கேற்போர் ஆத்ம சாதகர்களாகும். சற்குருவின் அனுமதி பெற்றோர் மட்டுமே இதில் அனுமதிக்கப்படுவர். உணவு உண்டோர் சற்குரு தியானம் செய்ய வேண்டும். அன்று முழுவதும் மௌனம் காக்க வேண்டும். ஒவ்வொரு பிடி கவளமும் சற்குருவை சிந்தித்த வண்ணமாய் தங்கள் ஜீவனுக்கு வழங்க வேண்டும்.

முன்னதாக ஏக வணக்கம், சற்குரு வந்தனம், பஜன்ஸ், ஹனுமத் தியானம், ஹனுமான் சாலீசா பாராயணம், 1200 மக்களுக்கு பசிப்பிணி நீக்கும் நிகழ்வுகள் நடைபெறும். மேலும் பரங்கிப்பேட்டையில் சற்குரு சித்தர் சுவாமிகளின் திருவருட்பணி பற்றிய அருளுரைகள் வழங்கப்படும்.

இத்தெய்வீக திருநிகழ்வுகளில் பங்கேற்று வாழ்வில் நல்லெனயெல்லாம் பெற்று என்றும் இன்புற்று வாழ அனைவரையும் அழைக்கின்றோம்.

அன்பு

சற்குரு சித்தர் சுவாமிகள் பிரதம சீடர்

**தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா அவர்கள்**

துறவி லட்சுமிபாய்
ஓம் ஞானேஸ்வரி
திரு. சீனு ராம்தாஸ்
திருமதி. தமிழ்ச்செல்வி ராம்தாஸ்

சுவாமி கோடீஸ்வரானந்தா
திருமதி. நீலா சேகர்
திரு. குருமூர்த்தி
சிவசாது பரணன்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

சத்தியம்! தர்மம்! நியாயம்!

நூல்அஞ்சல்

சந்தோஷம்

ஓங்கார ஆசிரமம்

மயிலாடுதுறை பரப்பிரம்ம சற்குரு சித்தர் சுவாமிகளின்
51வது ஆண்டு குருபூஜையை முன்னிட்டு

# 60 இலை படையல் அழைப்பிதழ்

இடம் : பி.முட்லூர் ஆஞ்சநேயர் சந்நிதானம் | காலம் : 18.8.2014, திங்கட்கிழமை

பெறுநர்

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

அனுப்புநர்

ஓங்கார ஆசிரமம்
50, காமாட்சியம்மன் கோயில் தெரு, புதுச்சேரி-605001
Ph: 04132335551 Cell: 94442 29535, 94443 38118